# பொதுக்காலம் 24ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இரக்கம் நிறைந்த இறைவனுக்கு நமது மனமாற்றமே மகிழ்வைத் தரும் என்பதை எடுத்துரைக்கும் பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

'நோயற்றவர்க்கு அல்ல; நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை' என்பதை உரைத்த இறைமகன் பாவத்தை மன்னித்து மனமாற்றம் அடைவதையே விரும்புகிறார்.

தவறை தண்டிப்பதிலும்

மன்னிப்பதே மகத்துவமானது.

மனிதம் மண்ணில் மலர

மனங்கள் மாற வேண்டும்.

இன்றைய முதல் வாசகத்தில், கன்றுக்குட்டியை வணங்கும் இஸ்ரயேல் மக்கள் மீது இறைவன் சினம் அடைகிறார். அவர்களுக்காக மோசே பரிந்து பேசி, இறைவனின் இரக்கத்தைப் பெற்றுத் தருகிறார். நாமும் இறைவனை விட உயிரற்ற பொருட்களில் வைத்திருக்கும் பற்றை அகற்றி, அவர் திருவுளப்படி நடந்து இறை இரக்கத்தைப் பெறுவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், காணாமல் போன ஊதாரி மகனைக் கண்டு கொண்ட தந்தையைப் போல, இறைவன் நம்மீது ஏக்கமாய் உள்ளார் என்பதைக் காண்கிறோம். தன் தந்தையை மதிக்காமல், சொத்துக்களை விரயமாக்கி, பாவ வாழ்க்கையில் மூழ்கிய மகனின் பாவம் வெறுக்கப்பட வேண்டியது தான், அது மனிதரின் பார்வையில். "கடவுளுக்கும் உமக்கும் எதிராக பாவம் செய்தேன்" என்று மனம் வருந்தி ஏற்பட்ட மனமாற்றம் மன்னிக்கப்பட்டது. இதுவே இறை இரக்கம். மன்னிப்பு மீண்டும் அழகானதொரு வாழ்வைத் தளிர்க்கச் செய்யும்.

நாமும் நம் பாவம் உணர்ந்து மனம் வருந்தி மனமாற்றத்தை பெற்றுக்கொள்ள இப்பலியில் வேண்டுவோம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. இரக்கம் நிறைந்த தெய்வமே!

எம் திரு அவையை வழிநடத்தும் திருஅவைத் தலைவர்கள், ஆயர்கள், குருக்கள் இரக்கத்தின் பாதையில் மக்களை வழிநடத்தவும், மக்கள் மனமாற்றம் அடைய தேவையான இரக்கப் பாதையைக் காட்டிட வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

2. மனமாற்றத்தை விரும்புபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள் மக்களை வாட்டி வதைக்கும் வரிச் சுமையை குறைத்து, வளமான செயல் திட்டங்களை செயல்படுத்துவதில் தங்கள் கர்வத்தைக் கைவிட்டு, மூத்த அதிகாரிகளின் ஆலோசனையை ஏற்று, வளர்ச்சிப் பாதையில் நடத்த நல்லறிவு தரவேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

3. இரக்கத்தின் தெய்வமே எம் இறைவா!

நாங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் அனைவரிடமும் இரக்கத்தை வெளிப்படுத்தவும், தேவையிலுள்ளோர், நோயில் வாடுவோர், மனம் வருந்துவோர் அனைவரிடமும் அன்பும் இரக்கமும் காட்டி உமது பிள்ளைகளாக வாழ வரம் அருளவேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

4. காணாமல் போன மகனை கண்டெடுத்த தந்தையை உவமையாக்குபவரே எம் இறைவா!

நாங்கள் எங்களுள் தொலைந்து போன நற்குணங்களைக் கண்டெடுக்கவும், எங்களில் தலை தூக்கியிருக்கும் ஆணவச் செருக்கினை, இறைவன் வெறுக்கும் காரியங்களை எங்களுக்குள் புதைக்கும் வரம் அருள வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

5. நலன்களை அருள்பவரே எம் இறைவா!

எங்களுக்குத் தேவையான மழை பொழிந்து விவசாயம் சிறக்கவும், பொருளாதாரம் ஏற்றம் பெறவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி பெருகவும், படிக்கும் மாணவர்கள் கல்வி, ஞானம், ஒழுக்கத்தில் சிறக்கவும், வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமது அருளால் பெற்று நிறைவடையவும் வேண்டும் என ஆண்டவரை மன்றாடுவோமாக.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com